# சத்திய வேத
# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**

சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | „ „ | 4-50 |
| 3 மாத | „ „ | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 21-ம் இல.


# நொடிப்பொழுதில் 50,000 மக்கள் மடிவு

தென் அமெரிக்காக் கண்டத்தில் பெருதேசத்தில் பயங்கர பூமியதிர்ச்சி சென்றவாரம் நடந்ததன் காரணமாக 50,000 மக்கள் ஒரு நொடிப் பொழுதில் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது. தலைநகரமாகிய லீமாபட்டணத்திலேயே பெருஞ்சேதம் ஏற்பட்டது. ஆகாயவிமானத் தளம் அங்குமிங்கும் வெடித்திருப்பதால் மறு இடங்களிலிருந்து உதவிக்கு அந்நகரத்துக்கு விமானங்கள் செல்லமுடியா திருக்கின்றது. இத்தகைய பூமியதிர்ச்சி முன்னொருபோதும் உலகில் நடைபெறவில்லையெனவும், அத்தொகை மக்கள் எங்கேயேனும் பூமியதிர்ச்சியினால் மாண்டதில்லையெனவும் கூறப்படுகிறது. பெருதேச மக்கள் பெரும்பாலும் வறுமைமிக்க மக்கள் என்பதையும் அங்கே பெருந்தொகையானோர் கத்தோலிக்கர் என்பதையும் நேயர்கள் அறிவர்.

## இலங்கையருக்கு பரி. தந்தையின் கனிந்த வார்த்தைகள்

பரி. தந்தையின் குருத்துவ தங்கயூபிலி வைபவத்தின்போது அவரைப்பேட்டிகாண இலங்கையர் குழுவொன்று கருதினால் கூறே தலைமையில் வத்திக்கானில் காத்துநின்றது. அவர்கள் பக்கம் திரும்பி பரி. தந்தை கூறிய கனிந்த வார்த்தைகள் இவையாம்:

"எமது சகோதரன் கருதினால் கூறே அவர்களுக்கும், மற்றும் இன்று நம்மைப் பேட்டிகாண எவ்வளவு கஷ்டங்களையும் பொருட்படுத்தாது இங்கு வந்திருக்கும் இலங்கைப் புதல்வர், புதல்விகளுக்கும் அவர்களைக் காண்பதில் நாம் அடையும் உண்மையான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உங்களைப் பார்க்கும்போது உங்கள் குடும்பங்களையும், இனசனரையும், உமது நாட்டையும் நினைவு கூர்ந்து கொள்ளுகிறோம். உங்கள் யாவருக்காகவும் எப்போதும் செபித்துக் கொள்ள வாக்குறுதி அளித்து, உங்கள் யாவரையும் உங்களுக்கு அருமையான யாவற்றையும் தேவனது பாதத்தில் வைத்து ஆசிர்வதிக்கிறோம்."

## 23-ம் அருளப்ப பாப்பரசரது மறைவின் 7-வது வருட முடிவு

1963-ம் ஆண்டு ஆனிமாசம் 3-ம்திகதி 23-ம் அருளப்ப பாப்பரசர் இவ்வுலகிலிருந்து மறைந்த தினம். அத்தினத்தை சென்றவாரம் அகில உலகமும் ஆழ்ந்த துக்கத்துடன் ஞாபகப்படுத்திக் கொண்டது. கத்தோலிக்கரால் மாத்திரமன்றி மறு கிறீஸ்தவ சபையினராலும், பிறசமயத்தவராலும், நிரீஸ்வர வாதிகளாலும், மார்க்கசிய வாதிகளாலும் யாவராலும் வானளாவப் புகழப்பட்ட ஒரு பாப்பரசர் இருந்தாரென்றால் அவர் 23-ம் அருளப்ப பாப்பரசரே! அவரை மக்களின் பாப்பரசரென சுருங்க அழைக்கலாம்.

○ அவரது மரணசெய்தியைக் கேள்விப்பட்ட இத்தாலிய தேசகொமியூனிஸத் தலைவர் ரொக்ஸியாற்றி "இவரது மரணம் எமக்கு உண்மையான துக்கத்தைத் தருகின்றது" என்றார்.

○ "மக்களிடையே சமாதானம் நிலவ 23-ம் அருளப்ப பாப்பரசர் உழைத்தது போல் வேறு எவரும் உழைத்தது அறியோம்" என்றார் ஹங்கேரி தேச பிரதமர்.

○ "23-ம் அருளப்பபாப்பரசருக்கு எவராவது விரோதியாயிருக்கமுடியாது" என்றார் ருஷிய தலைவர் நிகிற்றா குருஷேவ்.

## 40 ஆங்கில வேதசாட்சிகளுக்கு ஐப்பசி 25 இல் அர்ச்சியசிஷ்ட பட்டம்

ஆங்கிலதேசம் புறொட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவிக்கொண்ட அக்காலத்திலே தமது சமய விசுவாசத்துக்காக உயிரைப் பலிகொடுத்தபலருள் நாற்பது வீரருக்கு இவ்வருடம் ஐப்பசிமாதம் 25-ந்தேதி அர்ச். பட்டம் அளிப்பதென பரி. தந்தை முடிவு செய்துள்ளார். வேத விசுவாசம் முன்போல் ஒளிராது மங்கிவரும் இக்காலத்திலே ஆங்கில வேதசாட்சிகளின் பரித்தியாகத்தை மக்கள் மனதில் நன்றாகப் பதித்துவிட இவ்வைபவம் உதவுமென நம்பப்படுகின்றது. மறு கிறிஸ்தவ சபைகளுடன் கத்தோலிக்க திருச்சபை நாடும் ஒற்றுமைக்கு இவ்வைபவம பங்கம் வருவிக்க கூடுமென ஒருகாலம் ஆங்கிலதேச திருச்சபை அதிகாரிகள் எண்ணி வந்தது உண்மையே. ஆனால், இது கருமமாக வத்திக்கானுக்கும், அவர்களுக்குமிடையில் பரஸ்பர விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பயனாக ஆங்கில வேதசாட்சிகள் 40 பேருக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் அளிப்பதால் ஒற்றுமை இயக்கம் பாதிக்கப்படமாட்டாதுஎனப் பரிசுத்த தந்தை அண்மையில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். அர்ச்சியசிஷ்ட பட்டம் அளிக்கும் திருச்சடங்கில் பங்குபெற பல நூற்றுக்கணக்கான யாத்திரிகர்கள் தரைமார்க்கமாகவும், ஆகாயவிமானமார்க்கமாகவும் இங்கிலாந்திலிருந்து செல்ல இருக்கின்றனர்.

## சென் வின்சென்ற் டி போல் சபை மேலும் சிறக்க ஒரு யோசனை

ஆசியாப்பகுதிக்குரிய சென் வின்சென்ற் டி போல் சபைகளின் சம்மேளனத்தின் உபதலைவர் திரு. என். மாட்டீனஸ் சென்ற வாரம் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் மலேசியா தேசத்தவர். கொழும்புப்பிரிவுகளிலுள்ள சென்வின்சென்டி போல் சபையினரின் கூட்டத்தில் இவர் ஆற்றிய சொற்பொழிவில் எவ்வாறு இச்சங்கம் இங்கு மேலும் சிறப்படையலாம் என சில யோசனைகள் கூறியிருக்கிறார்.

அவற்றில் சில பின்வருமாறு:

● இச்சங்கம் கத்தோலிக்கர் மாத்திரமல்ல பிறசமயத்தவரையும் அடக்கியதாய் இருக்கலாம். இவர்கள் துணை அங்கத்தவர்களாய் இருந்து சேவை செய்யலாம்.

● இளைஞரை இச்சபையில் அங்கத்தவர்களாக்க தகுந்த முறைகள் கையாளப்பட வேண்டும்.

● ஒருகுறித்த காலத்துக்குமேல் அதே பதவியில் ஒருவரும் இருத்தல் தகாது.

● சபைகள் இணைந்து வேலை செய்யலாம் அதாவது இருதேசங்களுக்குரிய சபைகள், இருபிரிவுகளுக்குரிய சபைகள் ஒன்றித்து வேலை செய்யலாம்.

● சிறுகைத்தொழில்களுக்குரிய மூலப்பொருட்களை இனமாகக்கொடுத்து வறியவர்களை அக்கைத்தொழில்களில் ஊக்கப்படுத்தலாம்.

● உணவு, உடை முதலியன தானம் செய்வதுடன் சிறிய வீடுகளும் தானம் செய்து உதவலாம்.

## ஜனாதிபதி ரீற்றோ பாப்பரசரைச் சந்திக்க இருக்கிறார்

இவ்வருட இறுதியில் யூகோசிலேவிய தேச ஜனாதிபதி ரீற்றோ பரிசுத்த தந்தையைச் சந்திக்க இருக்கிறாரென அறிகிறோம். ஒருகொமியூனிஸத் தேசத் தலைவர் பரிசுத்த தந்தையை இரண்டாம் முறையாகத் தரிசிப்பது இதுவே முதலாம் சம்பவமாகும். சில வருஷங்களுக்கு முன் ஜனாதிபதி ரீற்றோ றோமா புரிக்கு விஜயம் செய்தபோது பரிசுத்த தந்தையையும் தரிசித்தார். றோமா புரிக்கு விஜயம் செய்யும் பிறநாட்டுத் தேசத் தலைவர் யாவரும் பரிசுத்த பிதாவையும் சந்திப்பது சகஜமாயிருப்பதால் இத்தரிசனையில் விசேஷ நோக்கங்கள் எதுவும் இல்லையென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன: ஆனால் பரிசுத்த தந்தையும் ஜனாதிபதி ரீற்றோவும் உலகசமாதானத்தில் நாட்டமுடையவர்கள் என்பதை யாவரும் அறிவர்.

## ஸ்பெயின் தேசத்துக்கு பரிசுத்த தந்தை செல்ல இருக்கிறாரா?

இவ்வருடம் புரட்டாசி மாதம் பரிசுத்த தந்தை ஸ்பெயின் தேசத்துக்குச் சென்று அத்தேச அர்ச்சியசிஷ்டர்களில் ஒருவராகிய புனித தெரேசாவுக்கு திருச்சபையின் கலாநிதிப் பட்ட மகிமை அளிக்கும் வைபவத்தில் பங்குபெற இருக்கிறாரென வதந்திகள் கூறுகின்றன. புனித தெரேசா திருச்சபையின் கலாநிதிகளில் ஒருவராக புரட்டாசி மாதம் 27-ம் திகதி பிரகடனஞ்செய்யப்பட இருக்கிறார். இப்பட்டம்சூட்டப்பட்டதும் இவரே பெண்களுள் திருச்சபையின் முதற் கலாநிதி யாவர். ஐப்பசி மாதம் சியன்னாநகரின் புனித கத்தரீனம்மாளுக்கு இத்தகைய கலாநிதிப் பட்டம் சூட்டப்பட இருப்பதால் பாப்பரசர் அங்கு செல்வாரெனவும் கூறப்படுகிறது. மேலும் அடுத்த வருடத்தில் பரி. தந்தை அவுஸ்திரேலியா, மனிலா முதலிய பாகங்களுக்கும் செல்ல இருப்பதாகவும் செய்திகள் பரவியிருக்கின்றன. ஆனால், இச் செய்திகள் எவையும் வத்திக்கானால் உறுதிப்படுத்தப்படவில்லை.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியாவின் புனித றீத்தம்மாள்

அசாத்தியமான காரியங்களின் விசேட சலுகைக் காரியென இருகரமெடுத்துப் பக்திசெய்யப் படுகின்ற அற்புத வரத்தியாகிய புனித றீத்தம்மாளின் திருநாள் சென்ற வைகாசித்திங்கள் 22-ம்நாள் வந்துபோயிற்று. இந்தப் புனிதவதியின் உலக வாழ்க்கையில் நிகழ்ந்த சில அசாத்தியமான காரியங்களை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் என்க.

(தொடர்ச்சி)

அதனால் அவளை ஓர்நாள் அழைத்து, "சிஸ்றர் றீத்தா, அதோ முற்றத்தின் பக்கமாகப் பட்டுப்போன ஒரு அடிமரம் நிற்கின்றதே; அதற்குநீர் அனுதினமும் ஒழுங்காகத் தண்ணீர்ஊற்றி வரவேண்டும்" என்றார். அது ஒரு பைத்தியமான அலுவலாய் அவளுக்குத் தோன்றியபோதிலும தாயாரின் ஆணைப்படியே அதற்கு ஒருநாள், இருநாள் அல்ல, பலநாள் தண்ணீர்ஊற்றி வந்தாள். அங்ஙனமாக, என்ன அற்புதம்! பட்டுப்போய் விறகுகட்டையாயிருந்த அந்த முதிய அடிமரம் ஒருநாள் நாலாபுறமும் துளிர்த்துப் பசுந்தளிர்கள் பரப்பி நிற்கக் காணப்பட்டது. அதுமுதல் தாயார் அவளுடைய தூயவாழ்க்கையில் எட்டுணையும் சந்தேகிக்கவில்லை.

கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளிலே— சிலுவையில் அறையுண்ட திவ்விய நாதரிலே அவள் கொண்டிருந்த பக்திபற்றுதல் இப்பொழுது வளர்மதிபோல் அவளிலே வளர்ந்து கொண்டுவந்து, துயரம்நிறைந்த கல்வாரிப் பயணத்தின்போது, நமது ஆண்டவர்பட்ட பாடுகளைக்கண்டு பரிதபித்து, மனங்கசிந்துருகிக் கண்ணீர் சிந்திய புண்ணிய மாதர்களைப் போல் அப்பிரயாணத்திலே அவர்பட்ட பாடுகள் வேதனைகளை நினைக்குந்தோறும் அவளும் நெஞ்சுருகி நெட்டுயிர்த்துக் கண்ணீர்சிந்தி அழுவாள். ஒருநாள் ஆண்டவரின் திருப்பாடுகள்பற்றிய ஓர் உருக்கமான பிரசங்கத்தைக் கேட்டபின் அறையுண்ட திருச்சிலுவை முன்பாக அவள் முழந்தாட்படியிட்டு, "திவ்விய இரட்சகரே, உம்மைப்போல நானும் பாடுபடவும், வேதனைப்படவும் திருவருள்பாலிக்கமாட்டீரா" என்று உள்ளம் மெழுகாய்உருக அழுதவண்ணம் இரந்து மன்றாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது அவள் முன்பாகவிருந்த அறையுண்ட திருச்சுரூபத்தின் முள்முடியிலிருந்த முட்களில் ஒன்று மின்னல்வேகத்தில் வந்து அவள் நெற்றியில் பதிந்து ஆழமான ஒரு காயத்தை உண்டுபண்ணியது. அதுமுதல் அந்தக்காயத்தால் அவள் இரவுபகலாய் இடையறாது மரணவேதனை பட்டுவந்தாள். அதனால் அவள் செபங்களிலும், பிரபத்திமுயற்சிகளிலும் ஏனைய கன்னியாஸ்திரிகளுடன் கலந்துகொள்ள முடியாதவளானாள். ஏனெனில் அந்தக் காயத்திலிருந்து அருவருக்கத்தக்க ஒரு துர்க்கந்தம் வீசிக்கொண்டிருந்தது. ஆயினும் 1405 ஆம் ஆண்டின் புனிதவருடத்தின்போது யூபிலிப் பலன் அடையுமாறு ஏனைய கன்னியாஸ்திரிகளுடன் கால்நடையாக றோமைநகரைத் தரிசிக்க விரும்பியவிடத்து அந்தக்காயம் மறைந்துவிட்டது. ஆனால், றோமைநகரிலிருந்து மடத்துக்குத் திரும்பியதும் அந்தக்காயம் மறுபடியும் திறந்துகொண்டது.

14வருடகாலமாக றீத்தம்மாள் தனது சிற்றறையில் ஒரு சிறைக்கைதிபோல் இருந்துவரலானாள். அத்தனை வருடகாலமும் தனக்குண்டான கடோர வேதனையைப் பொறுமையோடும், சந்தோஷத்தோடும் அனுபவித்து வந்தாள். அவ்வாறாக அவள் ஒருநாள் தன்னைக்காண வந்த தனதுஉறவினளான ஒரு பெண்ணைநோக்கி, "ரொக்கா பொறெனாவிலுள்ள எனதுவீட்டுத் தோட்டத்துக்குச்சென்று அங்கே மலர்ந்திருக்கக்காணும் றோசாமலரைப் பறித்துவந்து என்னிடம்கொடு" என்று கூறினாள். இதைக்கேட்டதும் அந்தப்பெண் ஆச்சரியமுற்றாள். ஏனெனில், "மாரிகாலத்தில் றோசாச்செடிகள் புஷ்பிப்பதில்லையே; ஆயினும் ஒரு றோசாமலரைக் கொய்துவந்து தனக்குக் கொடுக்குமாறு என்னைக் கேட்கின்றாளே; அவளுக்கு ஏதும் மனக்கோளாறு ஏற்பட்டிருக்குமோ?" என்று எண்ணினாள். என்றாலும் தோட்டத்துக்குச்சென்று பார்த்தபோது, என்ன ஆச்சரியம்! அங்கே ஓர் அழகிய புத்தம் புதிய றோசாமலர் இருந்தது. அதுவும் பட்டவைபோல் தோன்றிய கொப்புகளில் ஒன்றேயொன்றாய்ப் பூரணமாகப் புஷ்பித்த ஒரு றோசாப்புஷ்பமாகப் பொலிந்து விளங்கியது. அவளும் பெருமகிழ்வுடன் அதைப் பறித்துவந்து அவளிடம் கொடுத்தாள்.

அம்மட்டில் றீத்தம்மாள் நிற்கவில்லை. மீளவும் அந்தப் பெண்ணைநோக்கி, "நீ திரும்பவும் தோட்டத்திற்குச் சென்று அங்கேகாணும் இரு அத்திப்பழங்களைப் பறித்துவந்து எனக்குக் கொடு" என்றாள். றோசா மலர்களைப் போன்று அத்திப்பழகாலமும் அதுவன்று. ஆயினும் இம்முறை அப்பெண்ணுக்குச் சந்தேகம் ஏற்படவில்லை. அவளும் விரைந்து சென்றாள். அங்கே இரு அத்திப்பழங்களையும்கண்டு பறித்துவந்து கொடுத்தாள்.

இவ்விதம் தன்னை மேன்மைப்படுத்திய கடவுளுக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துமுகமாக அவ்விரு பழங்களையும் அவள் ஏற்றுக் கொண்டாள்.

ஆம், றீத்தம்மாள் அசாத்தியமான காரியங்களின் அர்ச்சியசிட்டவள். மாரிமழைகாலத்திலே, அதிலும் அதன் நடுப்பகுதியில் றோசாமலர்களையும், அத்திப்பழங்களையும் எதிர்பார்ப்பது உள்ளபடியே மனிதபலத்தால் ஆகமுடியாத அசாத்தியமாகும். அவளும் தன்னுடைய திருநேத்திரங்களில் றோசாமலரைப்போல பரிமளம்வீசி அழகுசெய்வதாயும் ஞானப்பழங்களில் செழுமையாயும் தோன்றிய அவளுடைய சீரியவாழ்க்கையின்வேண்டுகோளை அருளக் கடவுளால் மட்டும் இயலும்.

அதன்மேல ஒருசில மாதங்கள் மட்டுமே அவள் உயிர் வாழ்ந்தாள். அச்சில மாதங்களிலும் அவள் அனுபவித்த வேதனையோ இம்மட்டன்று. ஆயினும் அவைகளை மலர்ந்த முகத்துடன் சந்தோஷமாகவே அனுபவித்தாள். கடைசியாகப் பசுந்தளிர்கள், சுகந்தமலர்களால் பரிமளிக்கும் வைகாசி மாதம்— மரியன்னையின் வணக்கமாதம் வந்தது. ஆனல் றீத்தம்மாளுக்குப் பூலோக நித்திய வனப்புகளைக்காணும் காலமாயல்ல, பரலோகத்தின் நித்திய வசந்தகாலமாக அஃது இருந்தது. 1457-ம் ஆண்டு வைகாசிமாதம் 22-ம் தேதியன்று பரலோக சம்பாவனையைப் பெற்றுக்கொண்டாள்.

வாணித்தபின் அவளுடைய நெற்றிக்காயம் ஒருவைரமணிபோல் துலங்கிப் பிரகாசித்து, கன்னிகா மடமுழுவதும் கமகமவென்று ஒரு மதுரமான பரிமளவாசனையைப் பரப்பியது. அவளுடைய புனித உடல் வளர்த்தப்பட்டிருந்த அறைமுழுவதும் அற்புதமாகப் பிரபைவீசிப் பிரகாசித்தது. அவளுடைய உறவினருள் ஒருவர் அவளின் புனித உடலைத் தொட்டதே அவளுடையகாதைப் பீடித்திருந்த பாரிசவாதம் புதுமையாகக் குணமாகியது. அவள் மரித்து 500வருடங்களுக்கு மேலாகியும் அவளின் புனிதஉடல் அழியா திருப்பதும்தவிர, அவள்வதனமானது அன்றலர்ந்த மலரைப்போல சோபையுற்று விளங்குகின்றது.

— ஞானம்

## ஹங்கேரியில் திருச்சபைக்கு முன்னிலும் கூடிய கஷ்டம்

1964-ம் ஆண்டு ஹங்கேரி தேசத்துக்கும் திருச்சபைக்குமிடையில் ஏற்பட் உடன்படிக்கையின் பின் அத்தேசத்தில் சமய அனுசாரத்துக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்திருந்தது. ஆனல் இவ்வருடம் நியாயமற்ற முறைகள் மீளவும் கையாளப்பட்டு விசுவாசிகளுக்கும் குருமாருக்கும் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேற்றிராணிமார், குருமாருக்கு கிடைக்கும் கடிதங்கள் யாவும் அரசாங்க உத்தியோகஸ்தரின் பரிசிலனையின் பின்னரே அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. ஆகவே கடிதம் பெற்றுக்கொள்வதிலும், அனுப்புவதிலும் பெருந்தாமதங்கள் ஏற்படுகின்றன. கடிதங்களிற் பெரும்பாலானவை கொடுபடாமலோ அனுப்பப்படாமலோ போய்விடுகின்றன. மேற்றிராணிமார் ஸ்தானங்கள் பல காலியாயிருப்பதால் விசுவாசிகள் கவனிக்கப்படாது இருக்கின்றனர்.

## விவாகம் செய்த இரு தியாக்கோன்மார் ஆபிரிக்காவில் அபிஷேகம் செய்யப்பட்டனர்

தென் ஆபிரிக்காவில் பீற்றர்ஸ்பேர்க் பிரதேசமேற்றிராணியாராகிய வான்கூக் அடிகளாரால் விவாகம் செய்தஇருவர் சென்றமாதம் தியாக்கோன்மாராக அபிஷேகம் செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் திரு. மபுலேலா என்பவர். இவர் மனைவியாரும் 6பிள்ளைகளும் திருச்சடங்கின்போது ஆலயத்திலிருந்து பங்குபெற்றுக் கொண்டனர். திரு. மபுலேலா ஒரு கத்தோலிக்க தலைமையாசிரியர். தியாக்கோனுகிய மற்றவர் ஓர் உபதேசியார். அவருடைய மனைவியாரும் 3 பிள்ளைகளும் திருச்சடங்கில் பங்குபெற்றுக் கொண்டனர். அபிஷேகத்தின்போது பெருந்திரளான சனங்கள் கோவிலில் குவிந்திருந்தனர். தியாக்கோன்மாராக அபிஷேகத்துக்குத் தக்கவரென இருவரையும் அவ்விசாரணைப்பகுதி இல்லறகத்தோலிக்க தலைவர் மேற்றிராணியாருக்கு உறுதிகூறினர்; அவரது உறுதிமொழியை கரகோஷத்தினுல் அங்குள்ள மக்கள் ஆமோதித்தனர். அதன்பின் அவ்விருவரின் மனைவிமாரையும் பீடத்தண்டை முறையே அழைத்து நிரந்தரமாக தியாக்கோன் பதவிவகுக்க அவர்கள் சம்மதம் கொடுப்பார்களா என மேற்றிராணியார் அறிந்து கொண்டார். பின்பு அபிஷேகம் நடந்தேறியது. மேற்றிராணியாரது திருப்பலியில் புதிய தியாக்கோன்மார் இருவரும் பணிபுரிந்து திருவிருந்தருந்தினர். அவர்களது மனைவி, புத்திரர், இனசனர் முறையே அவர்கள் கரங்களிலிருந்து திருநன்மை பெற்றுக்கொண்டனர்.

✠

திருமதி
மாரிமுத்து காணிக்கைமேரி
இறைவனடி சேர்ந்த
**7-வது ஆண்டு நினைவு**
**மறைவு: 7-6-63**

"சருவேசுரா, இரக்கத்தின் ஆண்டவரே மரித்த வருடாந்த நாளை நாங்கள் நினைவுகொள்ளும் உமது அடியாளாகிய இவ்வாத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியின் இடத்தையும் சமாதானத்தின் பாக்கியத்தையும் மகிமையின் ஒளியையும் கட்டளையிட்டருளும். தேவரீரோடும் தூயஆவியின் ஐக்கியத்தில்"... ஆமென்.

எம் உள்ளமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள எம் அன்னையார் எம்மை விட்டுப்பிரிந்த ஏழாவது ஆண்டு சென்ற 7-6-70இல் நிறைவுற்றது. ஆகவே இதைக் காணும் யாவரும் இவ்வாத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மக்கள், மருமகள், பேரர்.

11/78, பாத்திமாகிரிவீதி,
மட்டக்களப்பு.

73-70

## நீதிபதிகளுக்கும் மறியல்வாசம் அவசியம்

அண்மையில் ஆதரவற்றவர்களுக்கு நிதி திரட்டும் கொண்டாட்டத்தில் ஆங்கில கருதினல் ஹீனன் அடிகளார் லண்டனில் ஆற்றிய சொற்பொழிவொன்றில் ஆங்கில தேசத்தில் சேவைசெய்யும் சகல நீதிபதிகளுக்கும் ஒரு குறித்தகாலத்துக்கு மறியல் வீட்டில்சீவியம்செய்து கைதிகளின் நாளாந்த சீவியத்தின் தன்மையை நேரில் அறிந்துகொள்வது அவசியம்என எடுத்துக்காட்டினர். மறியலில் காலம் கழிப்பவர்கள் சீவியத்தைத் திருத்திக் கொள்ள உதவி அளிக்கப்படுவதையே முக்கிய நோக்கமாக அரசாங்கம் கையாளவேண்டுமென்பதும், தண்டனை அனுபவிப்பது மாத்திரம் நோக்கமாய் இருக்கப்படாதென்பதும் அவரது அபிப்பிராயம். குறுகிய காலத்துக்கு மறியற்தண்டனை பெறுபவர்களுக்கு வாரத்தின் இறுதியிலுள்ள இரு நாட்களுக்கு சிறைத் தண்டனையைச் செய்து முடித்து எஞ்சிய நாட்களில் தத்தம் இலலத்தில் உபயோகமான சீவியத்தை நடத்த அனுமதி கொடுத்தல் நன்றென எடுத்துக் காட்டினர். கருதினலடிகள் கூறிய புத்திமதியை அரசாங்கம் ஏற்று அதை ஆராய்ந்து வருவதாக அறிகிறோம்.

பழைய படைச்சேவகன்

## மேற்றிராணியாரானர்

உலகப் பிரசித்தி பெற்ற "ஐறிஷ் காட்ஸ்மென்" என்னும் இராணுவப் படையில் ஒரு வீரனகச் சேவைசெய்த மைக்கல் பவன் என்பவர் ஆங்கிலநாட்டு பிறைற்றன் மேற்றிராசனத்தின் துணை ஆயராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு வயது 40. தேசிய சேவையை "ஐறிஷ் காட்ஸ்மென்" என்னுஞ் சைனிய பிரிவில் முடித்துக் கொண்டு, இரு வருடங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு, அதன்பின் றோமாபுரிக்குச் சென்று அங்கு குருமாணவனகப் பயிற்சிபெற்று, இங்கிலாந்தில் குருப்பட்டம் பெற்று, அங்கேயே சில வருடங்கள் சேவைசெய்தார். அதன்பின் றோமாபுரி ஆங்கில குருமாணவர் உயர் கல்லூரியில் பேராசிரியராகிச் சென்ற இருவருடங்களிலும் பிறைற்றன் மேற்றிராசன "சான்சல" ராகக் கடமை செய்து வந்தார்.

● அழகுவாய்ந்த வெனிஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பங்கு அடுத்த 30 ஆண்டிற்குள் கடலில் மூழ்கிவிடுமென அறிஞர்கள்கூறுகிறார்கள். இந்நகரம் இப்போது கடலுக்குள் அரைஅடிஆழம் மூழ்கியுள்ளது. இதன் தெருக்களைக் கடக்கப் படகுகளில் தான் செல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-ம் நூற்றூண்டின் பாப்புமார்கள்

**நிகழும் 20-ம் நூற்றூண்டிலே 13-ம் சிங்கராயர் முதல் 23-ம் அருளப்ப பாப்பானவர் ஈருக இதுவரை ஆறு பாப்புமார் திருச்சபையைப் பிரஸ்தாபமாக ஆட்சி செய்திருக்கின்றனர். அவர்களைத்தொடர்ந்து இன்று 6-ம் சின்னப்ப பாப்பரசர் அதி பிரஸ்தாபமாக அதனை ஆண்டு நடத்தி வருகின்றூர். பர்ப்பரசரின் குருத்துவ செம்பொன் யூபிலி விழாவையொட்டி இந்த ஏழுபாப்புமாரையும்பற்றிய சிலவிசேடங்களை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் என்க. 'யூனிவேர்ஸ்' எனும் பிரபல ஆங்கில கத்தோலிக்க பத்திரிகையில் வெளியான ஒருவிடயத்தின் வழிச்சென்று இது வரையப் பட்டுள்ளது.**

## 13ஆம் சிங்கராயர்

நிகழும் 20ஆம் நூற்றூண்டின் முதலாவது பாப்பானவர் 13ஆம் சிங்கராயரே. இவர் 1903ஆம் ஆண்டு பரமபதம் அடைந்தபோது, 93 வயதுடையவராய் இருந்தார். 25வருட காலம் இவர் பாப்புவாகவிருந்து திருச்சபையை ஆட்சிசெய்திருக்கின்றூர். தம்மைப் பின்தொடர்ந்துவந்த பாப்புமாரைப் போல் இவரும் தமது ஆரம்பகாலத்தில் பரிசுத்த ஸ்தானத்தின் ஸ்தானிகராய் — பெல்ஜிய அரசாங்கத்தினிடமாகப் பிறசெல்ஸ்நகரில் பாப்பரசரின் ஸ்தானிகராய், லண்டன், பரீஸ், கொலோன், மற்றும் நகர்களுக்கு அனுப்பப்பட்ட பாப்பரசின் தூதுக்கோஷ்டிகளுக்குத் தலைவராயிருந்தார். அக்காலங்களில் இவர் நடாத்திய பிரயாணங்களாலே சமூகப் பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்கப் பல சந்தர்ப்பங்கள் இவருக்குக் கிடைத்தன. அவைகள்பற்றிய கருத்துகள்பல அவர் மனதில் உதித்தன. "றேறும் நொவாறும்" அதாவது, "புதிய விஷயங்களின்" என்ற மகாப்பிரசித்திபெற்ற பொது நிருபத்தை வெளியிடுவதற்கு வேண்டிய ஆதாரங்களை இவருக்கு அளித்தன. தம்முடைய முதலாவது பொதுநிருபத்தில் இவர் வரையறுத்திருப்பதுபோல் அவருடைய நிர்வாகம் இக்கால நாகரீகத்துடன் திருச்சபையை ஒருமைப்படுத்துவதாய் இருந்தது. பாப்பரசின் நாடுகள்பற்றிய இத்தாலிய-வத்திக்கான் பிரச்சினை காரணமாக இவரும், இவரைத் தொடர்ந்துவந்த இரு பாப்புமாரும் "வத்திக்கான் மறியற்காரர்"களாய் இருந்தார்கள்.

## புனித 10 ஆம் பத்திநாதர்



இந்த நூற்றூண்டின் இரண்டாவது பாப்புவான இவர் சீவந்தராயிருந்த காலத்திலேயே ஒரு புனிதராகப் போற்றிக் கொண்டாடப் பட்டுவந்தார். 1954ஆம் ஆண்டு இவர் புனிதர்பட்டம் அருளப்பட்டார். 1835ஆம் ஆண்டு வறிய குடும்பம் ஒன்றில் பிறந்தஇவர் 1903ஆம் ஆண்டு 13ஆம் சிங்கராய பாப்பானவரிடமாகத் தெரிவுசெய்யப் படுமுன் அருளப்ப பாப்பானவரைப்போல் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாகப் பதவிவகித்திருந்தார். 1905ஆம் ஆண்டு இவர்விடுத்த கட்டளைச் சட்டம் ஒன்றூல் விசுவாசிகள் அனுதினமும், அடிக்கடியும் திவ்வியநன்மை பெறலாமென்றும், இன்னும் பிள்ளைகள் புத்திவிபரம் அறிந்ததும் திவ்வியநன்மை பெறலாமென்றும் சிபாரிசு செய்தமையாலே "நற்கருணையின் பாப்பானவர்" என்று அதிகம் சிறப்பாக அறியப்பெற்று வருகின்றூர். மேலும் ஒரு பொது நிருபத்தின் வழியாயும், 1907ஆம் ஆண்டு விடுத்த ஒரு சட்டத்தின் வாயிலாயும் இவர் இக்கால நவீன கொள்கைகளைக் கண்டிக்கலாயினர்.

## 15 ஆம் ஆசீர்வாதப்பர்

இவர் உலக மகாயுத்தம் நடந்தேறிய மகா கஷ்டமான காலத்திலே திருச்சபையை ஆட்சிசெய்தார். அக்காலத்திலே இவர் பரிசுத்த ஸ்தானத்தின் நடுநிலையை நிலைநிறுத்த முயன்று வந்தார். அப்போது நடைபெற்ற மனுத்தன்மையற்ற அக்கிரமமான யுத்த முறைகளைப் பலமாக எதிர்த்தும், ஆட்சேபித்தும் வரலானர். அப்பயங்கர யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரு முகமாக இயன்றமட்டும் அநேகம் தடவை முயன்றூர். இவருடைய ஆட்சிகாலம் (1914—22) ஏழுவருடங்களுக்குச் சற்றே மேற்பட்டதாகும். இந்த நூற்றூண்டில் இரண்டாவது குறுகியகாலம் ஆட்சிசெய்த பாப்பானவர் இவரே. இவர் எவரோடும் இலகுவிலே தொடர்பு கொண்டு சமாதானமாகப் புழங்கும் பெருங்குணம் படைத்தவர். 68ஆம் வயதிலே இவர் அமரத்துவம் எய்தினர்.

## 11ஆம் பத்திநாதர்



சின்னப்பபாப்பரசரைப் போலவே இவரும் 1922-ம் ஆண்டு பாப்புவாகத் தெரிவு செய்யப் படுமுன் மிலான்நகர் அதிமேற்றிராணியாராக விளங்கியிருந்தார். முன்னுள் குருமடப் பேராசிரியரும், நூல்நிலைய அதிபரும், பாப்பரசின் ஸ்தானிகரும், மலையேற்றத்திலே தீருமான இவர் 1914-ம், 18-ம் ஆண்டு மகாயுத்த அழிவுகளின் பின் உலகம் மறுபடியும் மறுமலர்ச்சி அடைய வேண்டுமென ஆசித்து ஆனமட்டும் பிரயாசப்பட்டு வந்தார். கிறிஸ்துநாதரிலே சகல காரியங்களும் திரும்பவும் புதுப்பிக்கப் படவேண்டுமென விரும்பி அயராது உழைத்து வந்தார். அதற்கு ஓர் அச்சாரமாக 1925ஆம் ஆண்டு கிறிஸ்து இராசா திருநாளை ஏற்படுத்தினர். சன சமுதாயங்களைச் சீர்ப்படுத்தும் விஷயமாய் "நாற்பதாம் வருடத்தில்" என்ற பொது நிருபமானது, 'றேறும் வொவாறும்' என்ற நிருபத்திலும் மிக மேம்பட்டதாகும். இவருடைய காலத்திலே 1929ஆம் ஆண்டு பரிசுத்த ஸ்தானத்துக்கும், இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே நடைபெற்ற லத்தறன் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப் படலாயிற்று, இதில் கருதினல் கஸ்பாறி ஆண்டகையும், சிஞ்ஞோர் முசோலினியும் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டனர். இதனை ஞாபகப்படுத்துமுகமாக அவ்வேளை பிடிக்கப்பட்ட அதிகாரபூர்வமான பிரதிமைப்படத்திலே இருவரும் முன் ஆசனங்களில் உட்கார்ந்திருக்க, இவர்களின் பின்புறமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிற்கின்றூர்கள். அத்தருணம் லத்தறன் மாளிகைத் தரிசகர்களின் குறிப்புப் புத்தகத்தில் இருவரும் கைச்சாத்திட்டிருக்கின்றனர். இந்த உடன்படிக்கையாலே பாப்புமார் "வத்திக்கான் மறியற்காரர்" என்பது நின்றுவிட்டது. 11ஆம் பத்திநாதர் 1939-ம் ஆண்டு சுபமிருத்தாயினர்.

## 12ஆம் பத்திநாதர்



1939-ம் ஆண்டு இவர் பாப்புவாகத் தெரியப் பட்டபோது, பாப்புமாரின் இராச்சிய மந்திரிமாரைப் பாப்புமாராகத் தெரிவு செய்யப்படாதென்று இருந்து வந்த பாரம்பரிய ஒழுங்கு இல்லாதொழிந்தது. ஒரு றோமானிய நியாயவாதியின் புதல்வரான இவர் ஜேர்மனியிலே பாப்பரசின் ஸ்தானிகராய் இருந்தபோது, பரிசுத்த ஸ்தானத்துக்கும் ஜேர்மனிய சோஷலிஸ்த அரசாங்கத்துக்குமிடையிலே 1933-ம் ஆண்டு ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துவைத்தார். ஆயினும், ஹிற்லர் இந்த உடன்படிக்கையைப் பலமுறைகளிலும் மீறி நடந்தார். அதனுல் திருச்சபையின் நிலைமை அங்கு சீர்கெடலாயிற்று. "பரிசுத்த ஆவியின் ஏவுதலால்" என்ற மகுட நாமத்துடன் இவர் விடுத்த பொதுநிருபம் திருச்சபையிலே இக்கால வேதாகம பாண்டித்தியத்திற்கு ஊக்கமளித்தது. தேவதாயார் ஆத்தும சரீரத்தோடு பரலோகத்திற்கு ஆரோபணமானுள் என்பதை 1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடத்தில் ஒரு விசுவாச சத்தியமாக நிர்ணயித்துப் பிரகடனஞ் செய்தவர் இவரே. இவர் தமது 82-ம் வயதிலே காதரில் நித்திரையாயினர்.

## 23ஆம் அருளப்பர்

அநேகமாக எல்லாக்காலங்களிலும் எவரைக்காட்டிலும் அதிகமாக நேசிக்கப்பட்டவர் இவரே எனலாம். இவரது மரணத்தைப்பற்றி எழுதிய பிரஸ்தாப பத்திரிகை ஒன்று, "இவர் அகிலமுழுவதையும் தமது கரங்களால் அரவணைத்

( தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசிசியின் புனித காட்சி

(வண. அருட்திரு மைக்கல் லண்சா, O.F.M., Matale)

[தொடர்ச்சி]

'இல் பவரெல்லோ' (Il Poverello) என்பதன் கருத்து, "சிறியஏழை மனிதன்" என்பதாகும். இது இத்தாலிய மக்களாலும் பின்னர் முழுஉலகத்தவராலும் புனித பிரான்சிஸ்குவானவருக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புநாமமாகும்; இதற்குக் காரணம் இல்லாமல் அல்ல.

தரித்திரமென்பது ஒருபோதும் ஒருசிறந்த பொருளாய் இருந்ததுமில்லை, இருக்கிறதுமில்லை. ஆயினும், அதனையும், அதனுல் நம் நாட்டு ஏழைகள் படும் துன்பங்களையும்பற்றி சென்றவருடம் ஐப்பசிமாதம் 12-ம்தேதி வெளியான மெசஞ்சர் சஞ்சிகையில் அமலமரி அன்னையின் தியாகிகள் சபைக் குருமார் இருவர் சுமார் இருபக்கங்கள் கொள்ளக்கூடிய உரைப்பகுதி ஒன்றை மன அருட்சிக்குரியவிதமாய் எழுதியிருந்தனர். புனித பிரான்சீஸ்குவாகிய 'இல் பவரெல்லோ' இன்றுசீவித்திருப்பாராயின், இக்குருமார் எழுதியவை ஒருவகையில் அவர்இதயத்தை மகிழச் செய்திருக்கும்.

ஏனைய மனிதர் செல்வத்தை எவ்வளவு மேலாக மதித்து, அதற்கு வணக்கம் செலுத்திவந்தார்களோ, அவ்வளவுக்கு புனிதபிரான்சீஸ்கு தரித்திரத்தை மேலாக மதித்துவந்தார். தன்னிலும்பார்க்க ஏழையான எவரையாவது கண்டால், அச்சந்தர்ப்பங்களிலே மாத்திரம் தான் காய்மகாரப் பட்டதாக அவர் உணர்வார். ஒருநாள் மிகவும் ஏழையான ஒரு மனிதனைக் கண்டு தன்னேடே சென்ற சகோதரரொருவருக்கு அவர் சொல்வார்: "தரித்திரத்தை அனுசரிப்பதற்கு வாக்குப் பண்ணிய சகோதரராகிய நமக்கு இது வெட்கத்துக்குரியதல்லோ! இவ்விடயத்தில் நாம் இம்மனிதனுல் தோற்கடிக்கப் படவேண்டியவரல்லவா'' என்று.

செல்வத்தைப்போல் பாவத்துக் கேதுவானதும், தரித்திரத்தைப்போல் மேலானதும், புண்ணியப்பேற்றுக்கு உரியதுமான வேறென்று இல்லையென்பதை ஏற்றுக்கொள்வதோடு, நாம் உண்மையுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். "மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுடையது" என்று நமது ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் கூறிய முதல் வாக்கியத்தில் உள்ளபடி நாம் மனத் தரித்திரராய் இருக்க வேண்டுமென்பதே முக்கியமானதாகும். ஏழைகளுக்கு மட்டுமன்றி, அக்காலத்திலும் இக்காலத்திலுமுள்ள செல்வந்தருக்குமே நமது ஆண்டவர் இவ்வாக்கியங்களைக் கூறுகின்றார் என்றே நான் எண்ணுகின்றேன். தனவந்தனெருவனிலும் பார்க்க, உண்மையான ஏழை மனிதனெருவன் மனத்தரித்திரம் உடையவனுயிருப்பது இலகுவாய் இருந்தபோதிலும், சில பெருஞ் செல்வரிடத்தும் அத் தரித்திரப் போக்கு இல்லாமற் போகவில்லை. இதற்கு உதாரணம், 13-ம் நூற்றுண்டில் பிரான்சிய அரசராயிருந்தஒன்பதாம் லூயிஸ் என்பவரும், இந்த 20-ம் நூற்றுண்டின் பிரக்கியாதிபெற்ற சினிமா நட்சத்திரமாக விளங்கிய செசில் பீ டே மில்' என்பவருமாவர்.



எவ்வாருயினும் நமது புனிதர் இவ்விஞபற்றி விவாதிக்கவில்லை. ஆயினும், தரித்திரத்தைப் பூரணமாகத் தெரிந்து கொண்டார். நமது ஆண்டவரும் அவர் தாயாரும் இவ்வுலகில் இருந்தபோது மெய்யாகவே ஏழைகளாய் இருந்தனர் என்றஉண்மையை அவர் மறக்க முடியவில்லை. புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபத்திலே, "ஆண்டவராகிய யேசுநாதர், அவர் தரித்திரத்தின் மூலமாய் நாம் செல்வந்தர் ஆகும் பொருட்டு நமக்காகத் தாமாகவே ஏழையானர்" என்று கூறியுள்ளார். ஆகவே தனது அன்பானமணப் பெண்ணுக்கு வாக்குப்பண்ணிய மத்தியகாலத்தில் வாழ்ந்த எந்தஒரு பிரபுவைப்போலபுனித பிரான்சீஸ்கும் தரித்திரத்தையே மணஞ்செய்து கொண்டார்.

இவ்வாருக, பிரான்சிஸ்குவின் சகல 3சபைகளினுடையவும் விசேட சின்னம் (அடையாளம்)தரித்திரமனப் போக்கேயாகும். இதற்கேற்ப பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபையானது; எல்லாவகையான உலக வீண்போக்குகளையும், அவை செல்வமாயிருந்தாலென்ன, கல்வித் திறமையாய் இருந்தாலென்ன அவற்றை விலக்குகின்றது. அன்றியும் உடையில் மாத்திரமன்றி உணவு, சமூகக் கொண்டாட்டங்களிலும் அதாவது, விவாகம், மரணம், பிறப்புத் திருநாள் முதலிய வைபவங்களிலும் மட்டுத்திட்டத்தைக் கடைப்பிடித் தொழுகுகின்றது. எனவே, "தரித்திர மனப்பான்மையொன்றே பிரான்சீஸ்கன் தூண்களில் முக்கியமானது" என்பதைப் பின்னரும் நாம் அறிவோம்.

---

● நியூயோர்க் நகரிலுள்ள அரசாங்க பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகக் கத்தோலிக்க குருவானவர் முதன்முறையாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். போர்டாம் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணைவேந்தரும், யேசுசபையைச் சேர்ந்தவருமான வண. திமோத்தி ஹீலி சுவாமியாரே இந்தக் குருவானவர்.

● மேற்கு ஜேர்மனிய அரசாங்கம் 23-ம் அருளப்ப பாப்பானவரை மகிமைப்படுத்துமுகமாகப் புதிய தபால் முத்திரை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அருளப்ப பாப்பானவரின் உருவத்தைத் தாங்கிய இந்த முத்திரையில் "பாசெம் ஞெரெறிஸ்" எனும் சுலோகம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

---

✠

"ஆண்டவரில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

திருவாளர்

வெ. ஞானப்பிரகாசம் டயஸ்

அவர்களின்

## 2-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்: 10-4-29 மறைவு: 13-6-68

இவரின் ஆன்ம சாந்திக்காக நிகழும் ஆனிமாதம் 13ம் திகதி புனித வெற்றி நாயகி ஆலயத்தில் திவ்விய பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவருக்கு கிறிஸ்துவில் உத்தானத்தின் மகிமையை விரும்பும்: என். ஏ. டயஸ், றெஜிஞ பீரிஸ், நீக்கிலாஸ்குரூஸ், அல்வீனு, யசிந்தா, இமல்டா, ஞானமலர், கில்டா, யூலியானுள், கொன்சி, டெய்சி, மற்றும் இனபந்துக்கள்.

"வாழ்வில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்" டெனிஸ் பிரான்சீஸ்குவத்தை, பேசாலை.

---

### நன்றியறிந்த தோத்திரங்கள்

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், வதிரி புனித அந்தோனியார், புனித ஆரோக்கிய நாதர், புனித பிலிப்புநேரியார் ஆகியோரின் மன்ருட்டினுலும் நான்கேட்ட வேண்டுதல் அருளப்பட்டது. அதற்கு நன்றியாக இதைப் பிரசுரிக்கின்றேன்.

ஓர் அடியாள்

கரவெட்டி 72-70

* * *

எனது மகள் சர்வகலாசாலைக் கடைசிப்பரீட்சையிலே சித்தியடையும்படி யேசுவின் திருஇருதயத்திடமும், மருதமடுமாதா, அர்ச். அன்னம்மாள், அர்ச். சூசையப்பர் இவர்களிடமும் மன்ருடினேன். நான் கேட்ட மன்ருட்டுக் கிடைத்தமையால் நேர்த்திப்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.


யாழ்ப்பாணம்.

---

# 20-ம் நூற்ருண்டின் பாப்புமார்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டார்'' என்று பாராட்டி, அவருடைய மனே பாவத்தையும், புனிதமான போக்குவாக்கையும் பொழிப்பாக விளக்கிக்காட்டியது. இவர் சுவிசேஷத்திற்கிணங்கக் கபடற்ற சுத்த மனமும், போலித்தனமற்ற மனத்தாழ்ச்சியுமுடைய ஒரு மகாபுருஷர். பரிசுத்த ஆவியின் ஏவுதலிலே முழுநம்பிக்கை உடையவராய்த் திருச்சபைச் சரித்திரத்தின் மகா விசேஷப்பட்டசகாப்தம்ஒன்றில் அதனை ஆண்டு நடத்தினர். வத்திக்கான் சங்கத்தைக் கூட்டிப் பிரஸ்தாபமுற்றுர். "பூமியிலே சமாதானம்'' என்ற தலையங்கத்தைக்கொண்ட அவரின் பெயர்பெற்ற பொது நிருபத்தின் தெளிவானபோக்கையும், அதிலே சந்தேகத்துக் கிடமில்லாது சமூக, அரசியல் நீதிவரையறுக்கப்பட்டிருந்ததையுமிட்டுத்திருசபையைச்சேராத மக்களாலே அது பிரமிக்கத்தகுந்த ஆர்வத்துடன் படிக்கப் பட்டது. தாம் பிறருடன் இனிதே ஊடாடவும், பிறரும் வந்து தம்முடன் இனிதே ஊடாடவும் தக்கதாகத் தமக்கும் ஓரளவு சுதந்திரத்தைக் கொடுத்து, ஒரு பாப்பானவருக்குரிய தகைமைபற்றி இருந்துவந்த சமயநம்பிக்கையைக் குறைத்துக்கொண்டார். எல்லாம் தமக்குத் தெரியுமென்ற மனப்பான்மை சிறிதுமில்லாது மற்றவர்களின் புத்திமதிகளையும் கேட்டு நடந்துவந்தார். இவர் 77-ம் வயதிலே பாப்பானவராகத் தெரியப்பட்டபோது, அவர் நிரந்தரமற்ற ஓர் இடைக்கால பாப்பானவரென்றே பிறரால் கருதப்பட்டு, இதிலும் திருச்சபையின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினர். இவர் 1963-ம் ஆண்டு தமது 81-ம் வயதிலே பரிசுத்தஆவியின் திருநாளுக்கு மறுநாள் திங்கட்கிழமை பரகதியடைந்தார். இந்த நூற்ருண்டில் மூன்றுவருடகாலம்— அதாவது அதிகம் குறுகியகாலம் ஆட்சிசெய்தவர் இவரே.



## 6ஆம் சின்னப்பர்

அருளப்ப பாப்பானவரைத் தொடர்ந்து வந்த இவர் தோள்மேல் அவர் தொடக்கிய மகா பாரமான அலுவல் சுமத்தப்படலாயிற்று. ஆனுல், இவர் பாப்பரசராகத் தெரியப்பெற்றமை எவருக்குமே பிரமிப்பைத் தரவில்லை. பாப்பரசரென்ற மட்டிலே வத்திக்கான் திருசங்கத்தைத் தொடர்ந்து வழிநடத்தி வெற்றிகரமாக ஒரு முடிவுக்குக் கொணர்ந்தார். அருளப்ப பாப்பானவர் தொடக்கிவைத்த மாமெரும் பணியைத் திருச்சங்கம் பூர்த்தி செய்ததைக் கண்டு பூரித்தார். இவர் அநேக வருடகாலமாகப் 12-ம் பத்திநாதரின் வலதுகரம்போல் விளங்கினர். "மலையே வரினும் தலையே சும" என்ற சுலோகத்திற்கிணங்க, எத்தகைய பெரும் கஷ்டங்களையும் மனமடிவின்றித் துணிகரமாக எதிர்கொண்டு செயலாற்ற வல்லவர். இத்தாலியின் பலவிடங்களுக்கும் மட்டுமல்ல, ஐக்கிய அமெரிக்கதேசம், இந்தியா, பலஸ்தீன், உகண்டா, கொன்ஸ்தாந்திநோப்பிள், சாடினியா முதலாம் வெளிநாடுகளுக்கும் விஜயஞ் செய்து, ஓர் அரிய சாதனையை நிலைநாட்டி, மங்காப் புகழ் ஈட்டியவர். ஏழைகள்பால் மிக்கான இரக்கசிந்தை படைத்தவர். எவரோடும் இனிதே புழங்கி அளவளாவும் பெருமாண்புடையவர். வருகிற புரட்டாசிமாதம் இவருக்கு 73 வயதாகிறது. பாப்பரசர் பல்லாண்டு வாழ்க!



—'ஞானம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவின் திருஇருதயம்

(பி. ஜே. அமிர்தநாயகம்)

"இவன் இருதயம் இல்லாதவன்!" இதிலும் பார்க்கக் கேவலமானது ஒன்றுமேயில்லை என்று எவரும் சொல்லுவார்கள். தாய் தன் பிள்ளைக்கும், பிள்ளை தன் தாய்க்கும் அன்பு காட்டாவிட்டால் தாய் – பிள்ளை தொடர்பும், பிள்ளை – தாய் தொடர்பும் எப்படியாக முடியும்? அன்பே ஒன்றிக்கிறது; அன்பே வளர்க்கிறது; அன்பே நிலைக்கச்செய்கிறது; அன்பே எவராலும் பாராட்டப்படுகிறது. குடும்பங்களிலும், சமூகத்திலும், தேசத்திலும் சதா ஒன்றிப்பும், வளர்ச்சியும், நிலைத்தலும் அன்பால்தான். இவ் அன்பின் நித்திய ஊற்று எங்கு இருக்கிறது? பாலில் வெண்ணெய் இல்லாது எப்படி வெண்ணெய் வந்தது? அன்பிலேயே உலகம் உருவானது. 'அவரின்றி ஒன்றும் படைக்கப்படவில்லை' என்று புனித அருளப்பர் அழகாகக் கூறுகிறார். கால எல்லைவரம்பிற்குள் மனிதனை உருவாக்கின வரம்பற்ற தேவன் தனது அன்பிலும், அன்பிற்காகவுமே அவனைப் படைத்தார். அதற்காகவே வார்த்தையானவர் மாமிசமானார். அவரின் உன்னத அன்பு, அவரின் அளவற்ற அன்பு அவரின் மாமிசத்தில் உருவான திரு இருதயத்துள் கோயில் கொண்டது. யேசுவின் திருஇருதயம் உன்னதமானவரின் ஆலயமும் வாசலுமாயிருக்கிறது. சீவியமும் வழியுமான நித்திய சீவிய வள்ளல் தனது நித்திய பரமானந்த சீவியத்தை எல்லோரும் ஏராளமாகப் பெற்றுக்கொள்ள இருதயமானார். ஏன் கிறிஸ்தவனுக்கு இருதயமில்லாது போகும்? கிறிஸ்துவைத் தரிப்பவனே கிறிஸ்தவன்.

### இருதயமில்லாதவனில் சீவியமில்லை:

இருதயம் அன்பினதும், இரக்கத்தினதும் இருப்பிடமாகும். இருதயம் எங்கு இருக்கிறதோ அங்கு மனிதர் இருக்கிறார்கள். இருதயத்தின் இலட்சணங்களான அன்பும், இரக்கமும் மனிதர்களைச் சமூகமாகத் திரட்டுகிறது. ஆனால் இந்த அன்பு சுயநலமற்றதாய் இருப்பது முக்கியம். இத்தகைய அன்பு தேவனிலிருந்து பிறக்கிறது. எனவே தேவாதிதேவன் கூறுகிறார்: "எனது நாமத்தினால் எங்கு இருவர் கூடுகிறார்களோ அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன்." இவ்வாறு தேவ அன்பினால் உருவாக்கப்பட்ட சமூகமோ அழிவைக் காண்பதில்லை. ஏனெனில் நித்திய சிரஞ்சீவியரான தேவனே இவ்விறைமக்களை உந்துகிறார். அவர்கள் அவரிலும் அவராலும் அவரோடும் என்றும் சீவிக்கிறார்கள். இம்மக்களின் உள்ளத்தில் சாந்தி என்றும் நிலைத்திருக்கிறது. காய்மகாரம் பகை எரிச்சல் இவர்கள் மத்தியில் இல்லை இவர்கள் மேன்மேலும் தேவனால் ஐக்கியப்படுகிறார்கள். இவர்கள் மத்தியில் உள்ள எல்லோரும் மற்றவர்கள் எவருக்கும் நல்ல சமாரித்தன்போல் நடக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட அங்கத்தவர்கள் எவருமே கிடையாது. இச்சமுதாயத்தில் மாத்திரமே உண்மையான சீவியம் இருக்கிறது. ஏனெனில் இவர்களில் இருதயங்கள் இருக்கின்றன. சுயநலமற்ற நிலையான அன்பின் இருப்பிடமே திருஇருதயம், அது தேவனின் உன்னத வாசஸ்தலம்.

### அவதாரமான அன்பு பலியானது:

அன்பு பலன் கொடுக்கிறது. அது நூறுமடங்கு பலன்கொடுப்பதற்காகச் சிலுவையில் பலியானது. பலிப்பொருளும் குருவும் அவரே. இப்பலி எழுவான் தொடக்கம் படுவான்மட்டும் ஒப்புக்கொடுக்கப் படுகிறது. ஏனெனில் அதற்குக் காலஎல்லை இல்லை. ஏனெனில் அன்பு தேவ அவதாரமாம், தேவ அன்பின் பலியில் குருவும், பலிப்பொருளுமாகிறான் கிறிஸ்தவன். யேசுவின் குருத்துவத்தில் சேராது பலிப்பொருளாக முடியாது. யேசுவில் பலிப்பொருளாகாவிட்டால் அவரின் குருத்துவத்தில் சேரமுடியாது. கிறிஸ்தவன் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள வேண்டும். தனது நாளாந்த அன்புச் சீவியத்தில் பலிப்பொருளாக வேண்டும். இதற்குத் தற்பரித்தியாகம் அவசியம். கிறிஸ்துவின் மரணத்தை அவன் அறிக்கையிட வேண்டும். ஆனால் இதில் ஒரு கசப்புமில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் உயிர்ப்பையும் எடுத்துரைக்கிறான் கிறிஸ்தவன். அவரின் மகிமை உத்தானத்தில் என்றும் நம்பிக்கையாய் இருக்கிறான். இதுவே நித்தியத்தில் பரமானந்த நிலைமையெனக் கூறுகிறோம். பிரசவ வேதனையை மகிழ்வுடன் ஒரு பெண் ஏற்றுக்கொள்ளுகிறாள். ஏனெனில் தாய்மையின் மகிமையை அவள் எதிர்பார்க்கிறாள். நித்தியபிதாவின் உதரத்தில் உதித்து, கிறிஸ்துவால் பிறப்பவர்கள் கிறிஸ்தவர்கள். என்ன ஆனந்தம்!

### என்றும் நம்முடன் வாசமாயிருக்கிறார்:

தேவன் அன்பு, தேவன் காலத்துக்கு அப்பால் ஆனவர். அவர் மனிதனை எவ்வளவு நேசித்தாரென்றால் அவனுடன் என்றும் வசிக்கச் சித்தமானார். மாமிசமான அன்பு நித்திய சீவியத்தின் போசனமாக மனிதனுடன் என்றும் வாசமாயிருக்கிறார். அவரில் சகல புண்ணியங்களும் பூரணமாய் இருப்பதால் அவரை அன்பர் என்று அழைக்கிறோம். அன்பு சகல புண்ணியங்களின் சம்பூரணம். அவரை நாம் நேசிக்கவும் அவரோடு நமது சகோதரர்களை பாரபட்சமின்றி சுத்த கருத்தோடு நேசிக்கவும் அவர் எங்களோடு வசிக்கிறார். அன்பின் நாயகனே நற்கருணை நாதன். அவரிடம் எல்லோரும் போவோம். அவர் நாங்கள் மோட்சவழியில் சேர்ந்து போகாது நமக்குத் தேவையான ஞான உலக செல்வங்களைப் பூரணமாய் அளிப்பார். அவர் கருணைநிறைந்தவர். மரணத்தில் நித்திரைசெய்த லாசரையும், நரகத்தளவு தன்னைத் தாழ்த்திக்கொண்ட மரியமதலேனாளையும் உலகத்தில் சீவிக்கவும் ஞானஉயிரைப் பூரணமாய்ப் பெறவும் செய்தவர் அவரே. அவரே சற்பிரசாத நாதர். பராமரிப்பின் சம்பூரணம் தாமே என்பதை எடுத்துக்காட்ட அவர் தம்மை நல்லாயன்என்று அழைக்கச் சித்தமானார். எல்லா வீடுகளிலும் ஆனிமாதத்தில் திரு இருதயத்திற்கு விசேஷ வணக்கத்தை அன்புடன் செலுத்தி, இருதயமுள்ளவர்களாக நமது சமூகத்தில் அன்பை வளர்ப்போம். தேவ அன்பரின் ஆட்சி என்றும் ஓங்குக. அவருக்கே சதாகாலமும் மகிமையும், புகழும் [illegible]

## 18 ஆயர்மார் அபிஷேகித்தனர்

ஆங்கில நாட்டில் அதிபிரதான மேற்றிராசனம் வெஸ்மினிஸ்தர் மேற்றிராசனமே. இந்த மேற்றிராசனத்துக்கு இரு துணை ஆயர்மார் சென்றவாரம் அபிஷேகம் செய்யப்பட்டார்கள். அவர்கள் விக்டர் குவாசேலி அடிகளாரும், ஜெறல்ட் மோகன் அடிகளாருமே. அபிஷேகம் செய்த பிரதான கருதினால் ஹீனன் அடிகளாருக்கு பதினெட்டு ஆங்கில ஆயர்மார் துணை புரிந்தனர். "ஒரே மேற்றிராசனத்துக்கு இரு குருமார் ஒரே சமயத்தில் மேற்றிராணிமாராகத் தொண்டு செய்ய அபிஷேகம் செய்யப்படுவது மிக அரிதான ஒருசம்பவம்" என ஹீனன் அடிகளார் இவ் வைபவத்தைப் பற்றி கூறும்பொழுது குறிப்பிட்டார்.

## அருளப்பபாப்பானவரின் இல்லம்

இற்றைக்கு ஏழு ஆண்டுகளின்முன் 23-ம் அருளப்பபாப்பானவர் அமரத்துவம் அடைந்தது முதல் வடஇத்தாலியில் பேர்காமோ நகருக்கு அண்மையிலுள்ள சொட்ரே இல்மொண்ரே எனும் கிராமத்தில் அவர் பிறந்து வளர்ந்த இல்லமானது உலகம் முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்களால் தரிசிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் பாடசாலைப் பெண்பிள்ளைகளின் குழு ஒன்று தங்கள் ஆசிரியைகள் சமேதராய்ச் சொட்ரோ இல்மொண்ரேயில் கட்டப்பட்டிருக்கும் மிஷனரிய கல்லூரிக்கு வெளியே நிறுவிநிற்கின்ற அவரது சீவிய பரிமாணமுள்ள வெண்கலச் சுரூபத்திற்கு ஆசாரஞ்செய்து திரும்பியது.

## யாழ்நகர்ப் பங்குகளின் ஐக்கிய நற்கருணை விழாவும் திருப் பவனியும்

இம்மாதம் 19-ந்தேதி வெள்ளிக்கிழமை (போயா தினம்) மாலை 5மணிக்கு புனித யுவானியார் கோவிலில் திருப்பலியுடன் ஆரம்பமாகும்.

அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதிவழியாக அடைக்கல மாதா (O. L. R.) கோயிலை அடையும். பின் 4-ம் குறுக்குத்தெரு, பிரதானவீதி, சந்தியோகுமையோர் கோவில் பாங்ஷால்வீதி, டேவிற்வீதி, பெரியகோயில் வீதிவழியாக பெரியகோயிலை அடையும். அங்கு இறுதி ஆராதனையுடன் விழா முடிவடையும்.

"நானே வழி, நானே உலகின் ஒளி,
நானே உண்மை, உயிர்தரும் உணவு"

என்ற யேசுவை— நற்கருணை நாதரை ஆராதித்து போற்றிப் புகழ்ந்து, நன்றிகூறி மன்றாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## உரோமைத் திருச்சபை பற்றி மெக்கோலே பிரபு

இன்றும் இல்லை, என்றுமே இருந்ததில்லை இப்பூவுலகில் உரோமன் கத்தோலிக்க சபையைப் போன்றளவுக்கு ஆராயத்தகும் அரசியல் படைப்பொன்று. அச்சபையின் வரலாறு மனிதப் பண்பாட்டின் இரு பெரும் யுகங்களையே இணைக்கின்றது. உரோமர் சகலதெய்வங்களுக்கும்எனக் கட்டியிருந்த "பங்தேயன்" எனும் கோவிலிலிருந்து பூசை நைவேத்தியங்களின் கானல் எழும்பிய காலத்திற்கோ ஃபிளேவியஸின் பேராங்கில் ஒட்டகச்சிவிங்கிகளும், புலிகளும் பாய்ந்து திரிந்த காலத்திற்கோ எமதுமனதைக் கொண்டுசெல்லக்கூடியதாய் நிலைத்துள்ள வேறெந்த ஸ்தாபனமுமே இல்லை. பாப்பரசர்களின் வரிசையுடன் ஒப்பிடும் இடத்து மிகப் பெருமை வாய்ந்த அரச பரம்பரைகள் தானும் நேற்றுப் பிறந்தவைகள் ஆகின்றன, இவ்வரிசையோ இடையறுத் தொடர்பாய் நெப்போலியனுக்குப் 19ஆம் நூற்றுண்டில் முடிசூட்டிய பாப்பு தொடக்கம் 8ஆம்நூற்றுண்டில் பெப்பினுக்கு முடிசூட்டிய பாப்புவரையும நாம் பின்தொடர்ந்து பார்க்கலாம். அதற்கும் பின்னதாக அப்பரிசுத்த பரம்பரை தொடர்ந்தே செல்கின்றது. உதிக்கும் பகலவனைச் சூழும் இருள்போன்ற புராதன இருளில் அது மறையும்வரை, வெனிஸ் நகரத்துக் குடியரசு தொண்மையில் அடுத்திருந்தது. ஆனால் பாப்புமார் ஸ்தாபனத்தின் முன் வெனிஸ் குடியரசே இன்று நேற்றுப் பிறந்ததாகும். அவ்வெனிஸ் குடியரசும் மறைந்துவிட்டது. பாப்புமார் ஸ்தாபனமோ நிலைநிற்கின்றது. பாப்பு ஸ்தாபனம் நிலைநிற்கின்றதென்றால், சிதைபொருளாய் அல்ல, பண்டைச்சாலைக் காட்சிப்பொருளாயல்ல, ஆனால் உயிரும் இளமைத் துடிப்பும் நிறைந்த தாய் என்க. அகுஸ்தீனுடன் (ஆங்கிலரை மனந்திருப்பக்) கென்ற் கரையோரத்தில் வந்து இறங்கியவர்களுடையதை ஒத்த பேராற்றல் நிறைந்த மறைப்பிரசாரர்களைக் கத்தோலிக்க திருச்சபை உலகின் எட்டாத எல்லைகள்வரை இன்றும் அனுப்பி வருகின்றது. அற்றிலாவை எதிர்த்த அதே உளஉறுதியுடன் எதிர் அரசுகளை இன்றும் எதிர்த்து வருகின்றது. இந் நீண்ட கால ஆட்சிக்கும்கூட முடிவு நெருங்கி வருகிறதென்றுணர்த்தும் அறிகுறி ஒன்றையும் இன்னுமே காணோம். உலகில் இன்றுள்ள எல்லா அரசுகளினதும், எல்லாக் கிறீஸ்தவசபை ஸ்தாபனங்களினதும் உற்பத்தியைக் கண்டது போலவே, இவைகளுடைய முடிவையும் இவ்ரோமன் கத்தோலிக்க சபைதான் காணப்போவதில்லை என்றதற்கும் எமக்கு நம்பிக்கை யாதும் இல்லை. இச்சபை பெருமையுற்று மதிப்பெய்தி இருந்த காலத்து சக்ஸோனியர் இன்னும் பிரித்தானிய நாட்டில் கால்வைக்கவில்லை, ஃபிறங்கியர் இன்னும் றைன் நதியைக் கடக்கவில்லை, அந்தியோக்கிய நகரில் கிரேக்க சொற்கலையே இன்னும் வளம்பெற்றிருந்தது. மெக்காவில் விக்கிரகங்களை இன்னும் வழிபட்டு வந்தனர். நியூஸிலாந்து தேசத்துப் பிரயாணிஒருவன் பரந்த ஒருவெட்டவெளியின் மத்தியிலே லண்டன் மாபாலத்தின் உடைந்த வில்லொன்றில் ஏறிநின்று புனித சின்னப்பர் பேராலயம் சிதைந்து கிடக்கும் காட்சியை வரைய எத்தனிக்கும் ஒரு காலத்தும் இச்சபை குன்றாஉறுதியுடன் இன்னும் இருக்கும்போலும்.

## ஆங்கில வெளிநாட்டு மந்திரி பரி. தந்தையைச் சந்தித்தார்

ஆங்கிலதேச வெளிநாட்டு விவகாரமந்திரி திரு மைக்கல் ஸ்ரிவாட் சென்றவாரம் திங்கட்கிழமையன்று வத்திக்கானுக்குச் சென்று பரி. தந்தையைத் தரிசித்தார். அவர்கள் சம்பாஷித்துக் கொண்ட கருமங்களுள் மத்திய கிழக்குப் போர் நிலைமை, மேற்கு—கிழக்கு நாடுகளின் உறவு முக்கிய இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அரை மணி நேரத்துக்குக் குறிக்கப்பட்ட பேட்டி ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக நடைபெற்றது. திரு ஸ்ரிவாட் பாப்பரசரை வெளிநாட்டு மந்திரியானதன்பின் சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**ஆனி — 1970**

| | | | |
|---|---|---|---|
| 14 | ஞாயிறு | வருட 11-ம் ஞாயிறு | [ப] |
| 15 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 16 | செவ்வாய் | ,, | [ப] |
| 17 | புதன் | ,, | [ப] |
| 18 | வியாழன் | ,, | [ப] |
| 19 | வெள்ளி | ,, | [ப] |
| 20 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# நன்றிக்கடன்

மனிதன் இறைவனுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளுள் ஒன்று நன்றிகூறுதலாகும். தினந்தோறும் எண்ணற்ற விதங்களில் இறைவனின் தயாளத்தையும் நன்மைத் தனத்தையும் நாம் உணருகின்றோம். எமது எண்ணுகைக்கு அப்பாற்பட்ட அளவில் அவர் எம்மீது சொரிந்துவரும் கொடைகளுக்கு உள்ளத்திலிருந்து நன்றிசெலுத்துதல் எமது கடமையாகும். எமக்கு உள்ள அனைத்தும் இறைவனிடமிருந்து வந்தவையே. இவ்வுலகிலும், மறுவுலகிலும் நாம் அடையும் நன்மைகள் அத்தனையும் அவரது செயலே. ஆகவே, நாம் ஒவ்வொரு மூச்சிலும் இறைவனுக்கு நன்றி செலுத்துவது தகும். ஆனால், இறைவன் தாம் அளிக்கும் ஒவ்வொரு கொடைக்கும் நாம்தனித்தனி நன்றிகூறுவது இயலாத காரியம் என்பதை அறிவார். அப்படிப்பட்ட நன்றியை அவர் எதிர்பார்ப்பதுமில்லை ஆனால், ஏதோஒரு விதத்தில் எமது நன்றியைக் காட்டவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

இறைவனுடைய சில கொடைகள் எம்மால் விளங்கிக்கொள்ள முடியாதனவாய் இருக்கலாம்; அல்லது கசப்பானவையாக இருக்கலாம். அவர் தமது திட்டத்தில் என்ன எண்ணியிருக்கிறார் என்பதை உணராமல் அவரை நோவது அறியாமை. நாம் கேட்பதைத்தான் அவர் தரவேண்டுமென்று நாம் அவருக்கு நிபந்தனை விதிக்கமுடியுமா? அவர் அளிப்பது எதுவாயிருப்பினும் அதை நன்மனதோடு ஏற்று அதற்கு நன்றிகூறுவதுதான் சிறந்ததாகும். இறைவனது கரங்கள் கொடையில் ஒருபோதும் பின்நின்றதில்லை. அதுபோல எமது நாவும் நன்றிகூறுவதில் பின்நிற்கலாகாது. அன்பைத் தெரிவிக்கும் வார்த்தைகளைப்போல், நன்றியைத் தெரிவிக்கும் வார்த்தைகளும் ஒருபோதும் மிதமிஞ்சிப் போவதில்லை.

கொடையாளிக்கு நன்றிகூறுவதுதான் அவரிடமிருந்து இன்னும்பல கொடைகளைப் பெறுவதற்கு வழியாகும் தேவன் அருளிய நற்கொடைகளின் அருமையை எவ்வளவுக்கு உணர்ந்து நன்றி செலுத்துகிறோமோ அவ்வளவுக் கதிகமாக அவர் தம் கொடைகளை அளித்துக்கொண்டே யிருப்பார். ஆனால் புதிய கொடைகளைப்பெறும் நோக்கத்தோடு மட்டும் நன்றி செலுத்தினால் அது உண்மையான நன்றியாகாது.

சகலத்திலும் இறைவனுக்கு நன்றிசெலுத்த வேண்டுமென வேதாகமம் கூறுகிறது. திருச்சபைதன் திருவழிபாட்டுச் சடங்குகளில் நன்றியறிதலுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. விசேஷ நன்மையொன்றைப் பெற்றவுடன் அதற்காக நன்றிகூறுமாறு பணிக்கின்றது.

நாம் தெரிவிக்கும் நன்றி உண்மையானதாக இருந்தால் அது உள்ளத்திலிருந்து எழவேண்டும். வழிபாட்டின் தூபத்தைப்போல் தூய்மை பொருந்தியதாய் மேலெழும் தன்மை பொருந்தியதா யிருத்தல்வேண்டும். சோர்ந்த முகத்துடன் நன்றிசொல்ல முடியாது. ஆகவே, ஆலய மணிகளின் ஒலியும், தீபங்களின் ஒளியும், தூபத்தின் நறுமணமும் நிறைந்த உள்ளத்துடன், மலர்ந்த முகத்துடன் இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக.

---

*மகிழ்ச்சி என்பது மிக அண்மையான பொருள்; அது மூடிய கதவு; ஆனால், தாழ்ப்பாள் இல்லை. கை நீட்டினால் திறந்துவிடலாம். ஆனால், தயங்கி நின்றுவிட்டாலோ மறைந்த காட்சிதான்.*

---

# சகல புனிதர்களினதும் ஆனந்தமாகிய யேசுவின் திவ்விய இருதயமே!

பெத்தலேகேமிலும், யூதேயா நாடு முழுவதிலும், கல்வாரியிலும், அதிசயத்துக் குரிய விதமாய், வெளிக் காட்டிய யேசுவின் நேச இதயம், பீடத்தில் நாளாந்தம் மனுக்குலத்தை இரு கரம் விரித்து அன்புடன் அழைக்கிறது. விசேஷமாக ஆனி மாதத்தில் தமது சிநேகக் கொழுந்து விட்டெரியும் இதயத்தைத் திறந்து, தாகமாய் இருக்கிறவன் என்னிடத்தில் வரக் கடவான். நான் அவனுக்கு ஜீவ ஜலத்தைக் கொடுப்பேன் என்று வருந்தி அழைக்கிறார். அவரது இதய அன்பை சுவை பார்த்த புனிதர்கள் நமக்கு யேசுவின் இதய அன்பைப் பற்றி என்ன கூறுகிறார்கள் தெரியுமா? "யேசுவின் இதய அன்பு நாம் கற்பனை பண்ண கூடிய எவ்வித அன்பிலும் மேலானது. ஒருவித கருவியினாலும் அளந்தறிந்து கொள்ள முடியாதது. ஒருவன் அவ்வன்புக்கீடு செய்ய முற்பட்டு, அச்சிநேகத்துக்கு தன்னை முழுவதும் கையளித்து, அடிமையாக்கி, தன்னைத் தானே வெறுத்து, அச்சிநேகத்தின் நிமித்தம் தன் உயிரையே தத்தம் பண்ணினாலும் ஈடாகமாட்டாது." என்கிறார்கள்.

யேசுவின் அன்பை விளக்க எங்கள் கையில் இருக்கும் சுவிசேஷம் ஒன்று மட்டும் போதாதா? அதன் விளக்கத்தை அறிவதற்கு, அவரது விசேஷ அழைப்புப் பெற்ற பரி. பவுல் அப்போஸ்தலரின் நிருபங்களை வாசிக்கலாம் அல்லவா? அன்பின் மீட்பரின் அருள்மொழிகளை வாசிக்கும் போது, அவரது அன்பின் செயல்களை, கருணை விளங்கும் அன்பின் புதுமைகளை யோசிக்கும் போது, நமதுஇதயம் அவர்பால் ஈர்க்கப்பட்டு, சிநேகக் கொழுந்து விட்டெரியும் அல்லவா?

அவர் தமது மலைப் பிரசங்கத்தில், "அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள்" என்று ஆறுதல் வார்த்தை கூறுகிறார். "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! என்னிடம் வாருங்கள்; நான் உங்களைத் தேற்றுவேன்" என்கிறார். தம்மைத் தேடி வந்த பிணியாளருக்கு, புதுமை செய்து, பிணி நீக்கித் தமது கருணை நிறைந்த உள்ளத்தை வெளிக்காட்டுகிறார். அவரது இதயத்தினின்றும் புறப்பட்ட சிநேகம் பரிய மதலேனம்மாளின் இதயத்தை ஊடுருவி அவளது கீழ்த்தரமான பாவத்தை உணரச் செய்து, கண்ணீர் சிந்தவைத்ததுமன்றி அவளைச் சுவிசேஷத்தில் எடுத்துக்கூறப்படும் புனிதை ஆக்கியது. அத்துடன் தம்மை ஆவலுடன் பார்ப்பதற்கு மரத்தில் ஏறிய சக்கேயுவை அழைத்து நான் உன்வீட்டில் விருந்துண்ணப் போகிறேன் என்று கூறி, "இன்று இவ் வீட்டிற்குச் சமாதானம் வந்த"தென்று சொல்லி, அவனது பிழையை உணரப்பண்ணி, பாவ அறிக்கை பண்ணவும் தூண்டியது. அவரது அன்பிதயம் சக்கேயுவைப் புனிதப்படுத்தி, அவனுடன் உறவாடி, அவனது வாஞ்சையை திருப்தியாகப் பூரணப்படுத்தியது. நாயீன் ஊர் விதவையின் சோகக்கண்ணீர் அவரது இதயத்தைத் தொட்டு அவள்மகனை உயிர்ப்பித்துப் புதுமை செய்தது என்றால், அவரது இதயத்தின் சிநேகச் செயல் அல்லவா அது.

பாவிகளைத் தேடிச் செல்லும் அவரது சிநேகஉள்ளம் காணாமற்போன ஆட்டின் உவமையை விளக்கியதுடன் நின்றுவிடவில்லை. யாக்கோப்பின் கிணற்றண்டை சமாரிய ஸ்திரியைத் தேடிச்சென்று "தாகத்துக்கு நீர் கொடு" என்று அப் பாவியான ஸ்திரிக்கும், உலகுக்கும் தமது ஆத்தும தாகத்தை அறிய வைத்தார்.

பெத்தானியாவில் அவரது இதய அன்பைக் கவர்ந்த அந்தஇல்லத்தில் லாசருவின் மரணத்தின்போது, தம்மைக் கண்ணீர் சிந்தவைத்து தமது சிநேக இதய ஆழத்தை யாவரும் அறியவைத்தாரே!

— நாதன் —

அத்துடன் நின்றுவிட்டாரா? இறந்த நண்பனை உயிர்ப்பித்ததும் அன்றி, "உயிரும் உத்தானமும் நானே" என்று தமது இதயங் கனிந்த கொடைகளை அறியவைத்தார்.

அடுத்தபடியாக அவரது இதய அன்பின் ஊற்று கல்வாரிமலையில் எவ்வாறு கரைபுரண்டு ஓடியது என்பதை அவதானிப்போம். தம்மைத் துன்புறுத்தியோருக்கு மன்னிப்பு அருளும்படி தமது பிதாவை இரந்து கேட்கிறார். என்னே, அவரது இதயக் கனிவு! மூன்று இருப்பாணிகளின் கொடூர வேதனைகள் மத்தியில் அவரது இதயம் பிதாவுடன் பரிந்து பேசி வாதாடுகிறது. அடுத்ததாக, வலது பக்கத்துக் கள்வனின் பாவ அறிக்கையையும், மன்றாட்டையும் கேட்ட அவரது சிநேக இதயம், "இன்று தானே நம்முடன் பரகதியில் இருப்பாய்" என்று வாக்குப் பண்ணச் செய்தது. தமது மானிட தேகத்தை உருவாக்கித்தந்த தம் அன்பின் அன்னையைத் தமது மார்பிலே சாய்ந்து, தமது அன்பில் மூழ்கிய புனித அருளப்பருக்குத் தாயாக்கி, மனுக்குலம் முழுவதற்குமே தாயாக்கினார். கடைசியில் அவரது சிநேகம் நிரம்பிய இதயம் பரலோகம் நோக்கி அபயமிட்டு பிதாவின் அன்புடன் இணைந்தது. கடைசியாக அவரது சிநேகம் நிறைந்த இதயத்தை ஈட்டியால் குத்தி இறந்துவிட்டாரா என்று பார்க்கிறான் போர்ச் சேவகன். சிநேகம் நிறைந்த அந்த இதயமோ, "நான் இறந்தாலும் உங்களோடு இருக்கிறேன்" என்று கூறி, தமது சிநேகத்தின் அடையாளமாக இரத்தமும் தண்ணீரும் கலந்த உதிரம் சிந்தி அச்சேவகனின் ஊனக் கண்களையும் திறந்து அவனைமனந் திருப்பியது.

இவ்வாறு அவர் தமது சீவியத்தின் அடையாளமாக — அன்புச் சின்னங்களாக மக்களுடன் என்றும் ஒன்றுபடுவதற்காக அவரது உயிருள்ள வார்த்தைகள் அடங்கிய வேதாகமமும், அவரையே உணவாகத் தந்த பரிசுத்த நற்கருணையும், அவரும் பிதாவும் ஒன்றுபட்டு அனுப்பும் சிநேகத்தின் புனித ஆவியும் ஆகிய இவை மூன்றும் நமக்கு வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருந்து நம்மைப் பக்குவப்படுத்தி, விண்ணரசின் பாதைக்கு வழிநடத்துகிறதல்லவா? அவர் ஏற்படுத்திய தேவதிரவிய அனுமானங்கள் இம்மூன்று கொடைகளிலும் புதைந்து கிடக்கின்றன அல்லவா? அவரது இதய அன்புச் சிநேகத்தால் அழைப்புப் பெற்றோர்க்கு, அவரதுஅழைப்புக்குச் செவி சாய்ப்போருக்கு, "என்னை நம்புங்கள்; என் சிநேகத்தை நம்புங்கள்; நான்தான் உங்களை இரட்சித்த யேசு; பயப்படாதேயுங்கள்! உங்களை என்னிடம் கையளித்துவிடுங்கள். அப்போது நான் உங்களை விண்ணரசின் சீரிய பாதையில் வழிநடத்திச்செல்வேன். அன்றியும் நீங்கள் எனக்குச் சாட்சிகளாய்இருப்பீர்கள்" என்கிறார். "நான் உங்களைச் சிநேகித்ததுபோல் ஒருவர் ஒருவரைச் சிநேகியுங்கள்; என்னையும் பிறர் சிநேகிக்கும்படி செய்யுங்கள்" என்பதே அவரது இதய அவா.

---

## வத்திக்கானில் புதிய தபால் முத்திரைகள்

முதலாவது வர்த்திக்கான் திருச்சங்கத்தின் நூற்றாண்டு விழாவை ஞாபகப் படுத்துமுகமாக வத்திக்கான் மூவினப் புதிய தபால் முத்திரைகளைச் சென்ற சித்திரை மாசம் 29-ம் திகதியன்று பாவனைக்கு வெளியிட்டிருக்கிறது. இவைகளின் பெறுமதி முறையே 20, 50, 180 லயராகும், ஒவ்வோர் இனத்திலும் 17,50,000 முத்திரைகள் அச்சிடப் பட்டிருக்கின்றன. இவைகள் தபாற் பாவனைக்குக் கட்டுப்பாடில்லாத பெறுமதியுடையன. வருகிற மார்கழி மாதம் 31ம் திகதிவரையிலே இந்த முத்திரைகள் விற்பனையில் இருந்துவரும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு ஆனிமீ 13ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org